22 DEC 2016
UNIVERSITY, SRI LANKA

# Eastern University, Sri Lanka
## Faculty of Arts and Culture
## 2nd Year 2nd Semester Special Degree Examination in Economics (2012/2014)
## (October/November 2016)

## ECS 2233 Managerial Economics

நேரம்: 3 மணித்தியாலங்கள்

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக**

(அ) கேள்வி நெகிழ்ச்சி என்றால் என்ன என்பதனைக் வரைவிலக்கணப்படுத்தி நெகிழ்ச்சி கணிப்பீட்டின் பயன்பாட்டினை நடைமுறை உதாரணத்துடன் விளக்குக?

(05 புள்ளிகள்)

(ஆ) கிழக்குப்பல்கலைக்கழகத்தில் பொருளியல் சிறப்புப்பட்டப்படிப்பை மேற்கொள்கின்ற மாணவர்கள் அத்துடன் அத்துறையில் பணியாற்றுகின்ற ஊழியர்களிடையே Elephant ஐஸ்கிரீம் கேள்வி தொடர்பாக சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் கேள்வித் தொழிற்பாடு பின்வருமாறு காணப்படுகின்றது.

$Qc = 100 - 3Pc + 4Py - 0.01 M + 2A$

இங்கு

Qc = கேள்வித்தொகை

Pc = ஓர் அலகிற்கான ஐஸ்கிரீம் விலை

Py = ஏனைய பொருட்களுக்கான விலை

M = ஊழியர்களின் மாதாந்த வருமானம்

A = விளம்பரச் செலவு

(i) Pc = 15 ரூபா, Py = 20 ரூபா, M = 20,000 ரூபா, A = 1000 ரூபா, ஆக காணப்படும் போது குறித்த ஐஸ்கிரீமிற்கான விற்பனைத்தொகையினை கணிப்பிடுக?

(04 புள்ளிகள்)

(ii) ஏனைய காரணிகள் மாறாதபோது Pc ஆனது 18 ரூபா ஆக அதிகரித்தால் புதிய கேள்வித்தொகை மாற்றத்தினைக் கணிப்பிடுக? மேற்கூறப்பட்ட கேள்வித்தொழிற்பாட்டின் அடிப்படையில் பொருளுக்கான விலைசார் புள்ளி நெகிழ்ச்சியினையும், விலைசார் வில் நெகிழ்ச்சியினையும் கணிப்பிடுக?

(04 புள்ளிகள்)

(iii) ஏனைய காரணிகள் மாறாதபோது குறித்த ஊழியரின் வருமானம் 25,000 ரூபா ஆல் அதிகரித்தால் குறிப்பிட்ட தகவல்களின் அடிப்படையில் வருமான நெகிழ்ச்சியினை கணிப்பிடுக? நீர் பெற்றுக்கொண்ட விடையிலிருந்து எவ்வகையான பொருள் என்பதனை கூறி விளக்குக?

(04 புள்ளிகள்)

இ) ரஸ்னா அரிசி ஆலையானது 90Kg அரிசிப் பைகளின் விலையினை 4,000 ரூபாவிலிருந்து 2,000 ரூபாவிற்கு குறைப்பதற்கு தீர்மானித்துள்ளது.

தற்போது ரஸ்னா அரிசி ஆலையானது 20,000 அரிசிப்பையினை ஒரு கிழமைக்கு விற்பனை செய்கின்றது. சந்தை ஆய்வாளர்கள் அரிசிப் பைகளின் கேள்வி விலை நெகிழ்ச்சியானது 2 ஆக இருக்குமென்று நம்புகின்றார்கள்.

**(i)** மேலே உள்ள தரவிலிருந்து விலைமாற்றத்தால் கேள்வித்தொகையில் ஏற்படும் மாற்றத்தைக் கணிப்பிடுக?

(04 புள்ளிகள்)

**(ii)** மொத்த வருமானத்தில் ஏற்படும் மாற்றத்தைக் கணிப்பிடுக?

(04 புள்ளிகள்)

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

02. (அ) தனியுரிமையில் விலைபேதப்படுதல் இடம்பெறத் தேவையான அடிப்படை நிபந்தனைகள் யாவை?

(07 புள்ளிகள்)

(ஆ) "ஒரு நிறைபோட்டி உற்பத்தியாளன் குறுங்காலத்தில் தனது உற்பத்தியை தொடர்ந்து நடத்துவதா? அல்லது நிறுத்துவதா? என்பதனைத் தீர்மானிப்பதில் தனது நிறுவனத்தின் சராசரி மாறும் செலவை (AVC) கருத்தில் கொள்வான்" இக் கூற்றை விளக்குக.

(07 புள்ளிகள்)

(இ) ஒரு உற்பத்தி நிறுவனத்தின் கேள்வித்தொழிற்பாடும் செலவுத்தொழிற்பாடும் கீழே தரப்பட்டுள்ளது.

$Q = 75 - 0.5P$

$TC = 500 + 30Q - 3Q^2 + (1/2)Q^2$

**(i)** இந் நிறுவனத்தின் MR க்குரிய சமன்பாட்டைக் காண்க?

(05 புள்ளிகள்)

**(ii)** உச்ச இலாபச் சமநிலைக்கான விற்பனை எண்ணிக்கையைக் காண்க?

(06 புள்ளிகள்)

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

03. (அ) பொருளியல் ஆய்வில் நேர்கோட்டுத்திட்டமிடலின் முக்கியத்துவத்தினை விளக்குக?

(05 புள்ளிகள்)

(ஆ) நேர்கோட்டுத்திட்டமிடலின் எடுகோள்கள் யாவை?

(05 புள்ளிகள்)

(இ) ஒரு நிறுவனமானது A,B ஆகிய இரு வகையான பொருட்களை உற்பத்தி செய்கின்றது. A என்ற பொருளை உற்பத்தி செய்யவதற்கு 4 அலகு மூலப்பொருளும், 3 அலகு ஊழிய மணித்தியாலமும் மற்றும் 2 அலகு இயந்திர மணித்தியாலமும் தேவைப்படுகின்றது. இவ் நிறுவனத்தின் நாளாந்த நிரம்பலானது 24 அலகு மூலப்பொருளும், 21 அலகு ஊழியமும், 30 அலகு இயந்திர மணித்தியாலமும் காணப்படுகின்றது. B என்ற பொருளை உற்பத்தி செய்யவதற்கு 2 அலகு மூலப்பொருளும், 3அலகு ஊழியமும், 5அலகு இயந்திர

மணித்தியாலமும் தேவைப்படுகின்றது. இந் நிறுவனத்தில் A,B ஆகிய இரு பொருட்களுக்கான அலகு இலாபம் முறையே ரூ160, ரூ100 ஆக காணப்படுகின்றது.

**(i)** மேலே கூறப்பட்ட தகவல்களின்படி நேர்கோட்டுத் திட்டமிடலின் சமன்பாட்டினைக் காண்க?

(04 புள்ளிகள்)

**(ii)** உற்பத்திக்கு சாத்தியமான எல்லையை அடையாளம் காட்டுக?

(03 புள்ளிகள்)

**(iii)** இந் நிறுவனத்தில் A,B ஆகிய இருபொருட்களுக்கான ஆகக்கூடிய இலாப மட்டத்தை காண்க?

(05 புள்ளிகள்)

**(iv)** இலாப வளையியினை வரைந்து மேலே நீர் காணும் விடையினைக் கொண்டு விளக்குக?

(03 புள்ளிகள்)

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**(அ)** உள்ளீட்டு வெளியீட்டு ஆய்வின் பொருளாதார முக்கியத்துவத்தினை விளக்குக?

(10 புள்ளிகள்)

**(ஆ)** ஒரு நிறுவனத்தில் விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் ஆகிய துறைகள் காணப்படுகின்றன. அவற்றின் உள்ளீடுகளும் மொத்த கேள்வியும் தாயவடிவில் தரப்பட்டுள்ளன. இத்தரவினை அடிப்படையாக கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

$$A=\begin{pmatrix} 0.3 & 0.4 & 0.1 \\ 0.5 & 0.2 & 0.6 \\ 0.1 & 0.3 & 0.1 \end{pmatrix} \qquad B=\begin{pmatrix} 20 \\ 10 \\ 30 \end{pmatrix}$$

A = தொழிநுட்பத்தாயம் B = இறுதிக்கேள்வி

**(i)** மேலுள்ள தரவினை அடிப்படையாகக் கொண்டு தொழிநுட்பக் குணகத்திற்கும், உற்பத்தி அளவிற்கும், இறுதிக் கேள்விக்கும் இடையிலான தொடர்பைக் காட்டும் சமன்பாட்டைப் பெறுக?

(04 புள்ளிகள்)

**(ii)** மேலே நீர் பெற்ற சமன்பாட்டை பயன்படுத்தி இறுதிக்கேள்வியானது 30,20,50 ஆக மாற்றமடைந்தால் உற்பத்தி அளவுகளில் ஏற்படும் மாற்றத்தினை கணிப்பிடுக?

(06 புள்ளிகள்)

**(iii)** மேற்குறிப்பிட்ட உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் ஊழியத்தின் அளவானது 40, 60, 20 எனக் காணப்பட்டால் ஒவ்வொரு துறைக்குமுரிய ஊழியத்தின் தேவையினைக் கணிப்பிடுக?

(05 புள்ளிகள்)

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

05. (அ) "எல்லை தொழிநுட்ப பதிலீட்டு விகிதம்" எனும் பதத்தினை விளக்குக?

(04 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் உற்பத்திச்சார்புகள் எவ்வகையான விளைவு விதியின் கீழ் செயற்படுகின்றன என்பதனை மதிப்பிடுக?

$Q = 12\,K^{0.3}\,L^{0.4}$

$Q = 3\,K^2 + 9K^2L^2$

$$Q = \frac{100K^2 + 200L^2}{2K^1 + 33L^1}$$

(06 புள்ளிகள்)

(இ) நிறுவனமொன்றின் உற்பத்திச்சார்பு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$\mathbf{Q = AK^{\alpha} L^{\beta}}$

$\alpha, \beta > 0$

$\mathbf{TC = rK + wL}$

இங்கு L = ஊழியம், w = ஊழியத்துக்கான விலையாகவும் K= மூலதனம் r = மூலதனத்துக்கான விலையாகவும் காணப்படுகின்றது.

$\frac{rK}{\beta} = \frac{wL}{\alpha}$ எனக்காட்டுக?

(06 புள்ளிகள்)

(ஈ) தளபாட தயாரிப்பு நிறுவனமானது ஊழியத்தின் மூலதனத்தையும் பயன்படுத்தி உயர்ந்தபட்ச வினைத்திறனுடன் உற்பத்தி வெளியீட்டினை மேற்கொள்கின்றது. இதனுடைய வெளியீடானது பின்வருமாறு காணப்படுகின்றது.

$\mathbf{Q = 100K^{0.5}L^{0.5}}$

இந் நிறுவனத்தில் கூலி(w) = 30 ரூபாவாகவும் ஆகவும் வாடகை (r) = 40 ரூபாவாகவும் தரப்படும் நிலையில் வெளியீடு 14444 அலகாகக் காணப்படுகின்று.

(i) மேற்கூறிய தரவினை அடிப்படையாகக் கொண்டு எவ்வளவு ஊழியமும், மூலதனமும் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்றது என்பதை கணிப்பீடு செய்க?

(05 புள்ளிகள்)

(ii) இந்நிறுவனத்தின் குறைந்தபட்ச செலவினை கணிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

அ) பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(அ) சரிசம ஆய்வு (Beak even Analysis)

(ஆ) எளிய பிற்செலவு மாதிரி

(இ) வியாபார எதிர்வுகூறல் (Business Forecasting)

(ஈ) தொழிநுட்ப தாயம்

(உ) நிழல்விலை (Shadow Price)

(ஒவ்வொன்றுக்கும் 5 புள்ளிகள்)
**(மொத்தம் 25 புள்ளிகள்)**